R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2018-2020
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
December 2020







**ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும்
சுதந்தரித்துக்கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன்,
அவன் என் குமாரனாயிருப்பான் - வெளி.21:7**

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

**Our TV Program:**
Every Tuesday 6.00 P.M on Tamilan TV &
Every Saturday 8.00 P.M on Nambikkai TV

YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan

love God
love people
be a servant



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 21 டிசம்பர் 2020 கனி 1



MONTHLY THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

# வேதபாடம்

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39




பாடம் : 13

தலைப்பு : பானபலி – Drink offering

வேத வாசிப்பு : லேவியராகமம் 23:1-13

1. காற்படி திராட்சபழரசம் - லேவி.23:13
2. பானபலியையும் செலுத்தக்கடவீர்கள் - எண்.28:9

**Don`t ask God why**
**He`s allowing something to happen**
**Ask Him what He wants you**
**To learn and Do in the**
**Midst of it.**



தேவன் சம்பவிக்கும்படி சிலவற்றை அனுமதிக்கையில்
ஏன் என்று அவரிடம் கேளாதே
அவர் நீ எதைக் கற்றுக்கொள்ளவேண்டுமென
விரும்புகிறாரோ அதை அவைகளின்
மத்தியில் செய்

**the word of christ** இருபத்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும் **YouTube** வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509








**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN


**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
**மாத இதழின் உள்ளே...**
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 244

போட்டியாளர்கள் கவனத்திற்கு,
கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. கர்த்தர் எவனை நோக்கி நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் சாகாதிருக்க வேண்டுமானால், ஆசரிப்புக் கூடாரத்துக்குள் பிரவேசிக்கிறபோது எதையும் எதையும் குடிக்கவேண்டாம் என்றார்?
2. அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள் என எழுதின அப்போஸ்தலன் யார்?
3. பழைய பிரமாணத்தின்படி செத்துப்போனவனுடைய பிரேதத்தைத் தொட்டவன் எத்தனை நாள் தீட்டுப்பட்டிருப்பான்?
4. நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால் எவைகளைத் தேடுங்கள் என பவுல் குறிப்பிடுகிறார்?
5. கர்த்தருடைய சந்நிதியிலே நின்று அவருக்கு ஆராதனை செய்வதற்கும் அவர் நாமத்தைக்கொண்டு ஆசீர்வதிப்பதற்கும், கர்த்தர் எந்த கோத்திரத்தைப் பிரித்தெடுத்தார்?
6. பிதாவாகிய தேவனுக்குள்ளும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற என எந்த சபைக்கு பவுல் எழுதினார்?
7. இது யாசேரின் புஸ்தகத்தில் எழுதியிருக்கவில்லையா, என எந்த புத்தகத்தில் படிக்கிறோம்?
8. ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்துகொண்டபடியினாலே, நாங்கள் உங்களைக்குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்தரிக்கக் கடனாயிருக்கிறோம் என பவுல் எழுதியிருக்கிறார்?
9. பயமும் திகிலும் உள்ளவன் எவனோ அவன் திரும்பி கீலேயாத் மலைகளிலிருந்து விரைவாய் ஓடிப்போகக்கடவன் என்றவுடன் ஓடிப்போனவர்கள் எத்தனைபேர்?
10. சோம்பலுள்ளவர்களாய், வீடுவீடாய்த் திரியப்பழகுவார்கள். இவர்கள் யார்?

## வேதாகம ஆய்வு... 29

**உசியா - Uzziah**



1. உசியா என்றால் யேகோவா என் பலம் (கி.மு.810-758)
2. 16 வயதில் யூதாவுக்கு ராஜாவானான் – 2நாளா.26:3
3. அமத்சியாவின் மகன் – 2நாளா.26:1
4. 52 வருடங்களாக ஆட்சிசெய்தான்
5. சகரியா என்பவன் உதவியாயிருந்தான் – 2நாளா.26:5
6. கர்த்தருக்கு தூபங்காட்ட துணிந்து குஸ்டரோகியானான் – 2நாளா.26:19
7. தன் மரண நாள் மட்டும் குஸ்டரோகியாயிருந்தான் – 2நாளா.26:21

சிறுவர் பகுதி

## தங்களைத் தீட்டுப்படுத்தாதபடி பாதுகாத்துக்கொண்ட நான்குபேர்

வேத பகுதி: தானியேல் 1:1–21



நேபுகாத் நேச்சார் என்ற ராஜா இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே ராஜகுலத்தார்களிலும் துரைமக்களிலும் யாதொரு மாசும் இல்லாதவர்களும், அழகானவர்களும், சகல ஞானத்திலும் தேறினவர்களும், அறிவில் சிறந்தவர்களும், கல்வியில் நிபுணரும், ராஜாவின் அரமனையிலே சேவிக்கத் திறமையுள்ளவர்களுமாகிய சில வாலிபரைக் கொண்டுவரவும், அவர்களுக்குக் கல்தேயரின் எழுத்தையும் பாஷையையும் கற்றுக் கொடுக்கவும் ராஜா தன் பிரதானிகளின் தலைவனாகிய அஸ்பேனாசுக்குக் கற்பித்தான். ராஜா, தான் உண்ணும் போஜனத்திலேயும் தான் குடிக்கும் திராட்சரசத்திலேயும் தினம் ஒரு பங்கை அவர்களுக்கு நியமித்து, அவர்களை மூன்றுவருஷம் வளர்க்கவும், அதின் முடிவிலே அவர்கள் ராஜாவுக்கு முன்பாக நிற்கும்படி செய்யவும் கட்டளையிட்டான்.

அவர்களுக்குள்ளே யூதா புத்திரராகிய தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்கள் இருந்தார்கள். இவர்களுக்கு மற்றொரு பெயர், பெல்தெஷாத்சார், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ. தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம் பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று, தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான். தேவன் தானியேலுக்குப் பிரதானிகளின் தலைவனிடத்தில் தயவும் இரக்கமும் கிடைக்கும்படி செய்தார். ஆகையால் தானியேல் பிரதானிகளின் தலைவனை நோக்கி பத்துநாள்வரைக்கும் உமது அடியாரைச் சோதித்துப்பாரும்; எங்களுக்கு புசிக்க பருப்பு முதலான மரக்கறிகளையும், குடிக்கத் தண்ணீரையும் கொடுத்து, எங்கள் முகங்களையும் ராஜபோஜனத்தில் புசிக்கிற வாலிபருடைய முகங்களையும் ஒத்துப்பாரும்; பின்பு நீர் காண்கிறபடி உமது அடியாருக்குச் செய்யும் என்றான். அந்தப்படியே சோதித்துப்பார்த்தபோது இவர்களுடைய சரீரம் புஷ்டியுள்ளதாக இருந்தது. மேலும் ராஜசமூகத்தில் நிற்கும்போது ஞானத்துக்கும் புத்திக்கும் அடுத்த எந்த விஷயத்தில் ராஜா அவர்களைக் கேட்டு விசாரித்தானோ, அதிலே தன் ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகளிலும் ஜோசியரிலும் அவர்களைப் பத்து மடங்கு சமர்த்தராகக் கண்டான்.

அன்பான தம்பி தங்கைகளே, நீங்களும் வருங்காலங்களில் இந்த நான்குபேரைப்போல உங்களை தீட்டுப்படுத்தாது பாதுகாத்துக் கொள்வீர்கள் என்றால் உங்களுக்கும் தேவன் ஞானத்தையும் புத்தியையும் தந்தருளுவார்.

**மனப்பாட வசனம்**

**“கர்த்தர் ஞானத்தை தருகிறார்;**
**அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்” நீதிமொழிகள் 2:6.**

**நடப்புச்செய்திகள்**

- கொரோனாவை கட்டுப்படுத்த அனைத்து நாடுகளும் முயற்சி.
- வருகின்ற சட்டமன்ற தேர்தலுக்கா அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகிறது.
- பேட்டரி வாகனங்களுக்கு பல சலுகைகளை அரசு வெளியிட்டுள்ளது.



தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 21 டிசம்பர் -2020 கனி - 1

ஆசிரியருரை

## கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்
### The Resurrection of Christ



**கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நமக்கு நம்பிக்கையைக் கொடுக்கிறது.** லாசருவின் சகோதரியாகிய மார்த்தாளிடத்தில் இயேசுவானவர் பேசிக்கொண்டிருக்கும்போது "அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்; இதை விசுவாசிக்கிறாயா என்றார்" (யோவா.11:25,26). நம்மில் எத்தனைபேர் இந்தவிதமான நம்பிக்கையுடையவர்களாயிருக்கிறோம். அநேகர் உயிர்த்தெழுதலில் நம்பிக்கையற்றவர்களாகவே இருக்கின்றனர். கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டுள்ளோர் அவருக்குள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். எனவே இயேசுவானவர் மார்த்தாளிடத்தில் சொல்லும்போது என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் மேலும் உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான் என்றார். உயிர்த்தெழுதலில் நம்பிக்கையற்ற சிலரைக்குறித்து நாம் வேதாகமத்தில் படிக்கிறோம். "என்னத்தினாலென்றால், சதுசேயர் உயிர்த்தெழுதல் இல்லையென்றும், தேவதூதனும் ஆவியும் இல்லையென்றும் சொல்லுகிறார்கள், பரிசேயரோ அவ்விரண்டும் உண்டென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள்" (அப்.23:8). இந்த சதுசேயர்களைப்போல உயிர்த்தெழுதலில் நம்பிக்கையற்ற அநேகரை நாம் காண்கிறோம்.

மரணத்திற்கு பின்பு ஒன்றுமில்லை என்று சொல்லுகிறவர்கள் துணிந்து பல பாவங்களில் ஈடுபடுகின்றனர். இருக்கும் வரை வாழ்ந்து அனுபவிக்க மனிதன் படைக்கப்பட்டான் என்று சொல்லி இவ்வுலகத்தில் தகாத விதமாக வாழ்ந்துகொண்டிருக்கிறவர்கள் கோடிக்கணக்கானோர். மரணம் எல்லோருக்குமே சம்பவிக்கும். மனிதன் மண்ணிலிருந்து எடுக்கப்பட்டபடியால் மண்ணுக்கே திரும்புவான். ஆனால் ஆவி தன்னைத்தந்த தேவனிடத்திற்குத் திரும்புகிறது என்பதை நீங்கள் அறிவீர்களா? அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதின கடிதத்தில் மரித்தோரின் உயிர்த்தெழுதலைக்குறித்து சொல்லும்போது; "புத்தியீனனே, நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே. நீ விதைக்கிறபோது, இனி உண்டாகும் மேனியை விதையாமல், கோதுமை, அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையையே விதைக்கிறாய்" அதைப்போல "மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும் அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்" என்கிறார் (1கொரி.15:36,37, மற்றும் 42).

**கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களுக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது.** ஆண்டவர் சீஷர்களுக்கு முன்னமே உயிர்த்தெழுதலைக்குறித்து சொல்லியிருந்தார். ஆனால் அவர்களோ அதை மறந்துபோனார்கள் என்றே சொல்லவேண்டும். ஏனெனில் இயேசு மரித்து அவரது உடல் கல்லறையில் வைக்கப்பட்டபின்பு கந்தவர்க்கங்களையும், பரிமளதைலங்களையும் எடுத்துக்கொண்டு வாரத்தின் முதல் நாளில் கல்லறையினிடத்திற்கு வந்தார்கள். நடந்தது என்ன? "அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார். மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படவும், சிலுவையில் அறையப்படவும், மூன்றாம்நாளில் எழுந்திருக்கவும் வேண்டுமென்பதாக அவர் கலிலேயாவிலிருந்த காலத்தில் உங்களுக்குச் சொன்னதை நினைவுகூருங்கள்" என்று தேவதூதர்கள் சொன்னார்கள் (லூக்.24:6,7). சிலவேளைகளில் நம்பிக்கையற்ற சூழ்நிலையில் இருக்கும் நமக்கு தேவனுடைய வார்த்தைகள் மேலும் நம்பிக்கையைக் கொடுத்து நம்மை உற்சாகப்படுத்துகிறது. முதல் நூற்றாண்டு சீஷர்கள் மிகவும் துக்கத்தோடு இருந்த அந்த நாட்களில் தேவதூதர்கள் சொன்ன வார்த்தைகள் அவர்களை உற்சாகப்படுத்தியது. அவர்களுடைய சந்தோஷத்திற்கு அளவே இல்லை அந்த அளவு சந்தோஷமுள்ளவர்களாக, இச்செய்தியை உடனே அறிவிக்கவேண்டும் என்று தீவிரமாக அந்த இடத்தை விட்டு கடந்துசென்றனர். இதில் மகதலேனா மரியாள் மற்ற மரியாளுடைய பங்கு அதிகமாயிருந்து. "அவர்கள் பயத்தோடும் மகா சந்தோஷத்தோடும் கல்லறையை விட்டுச் சீக்கிரமாய் புறப்பட்டு, அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்க ஓடினார்கள்" (மத்.28:8). இவ்வசனத்தில் மகா சந்தோஷத்தோடு என்று வாசிக்கிறோம். சத்தியம் தள்ளுபடியாகிவிட்டது என்று எண்ணிக்கொண்டிருந்த ஜனங்கள் மத்தியில் இயேசுவின் உயிர்த்தெழுதல் சீஷர்களுக்கு நம்பிக்கையையும் சந்தோஷத்தையும் கொடுத்தது.

"வாரத்தின் முதல்நாளாகிய அன்றையதினம் சாயங்காலவேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று; உங்களுக்குச் சமாதானம் என்றார். அவர் இப்படிச் சொல்லித் தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக்கண்டு சந்தோஷப்பட்டார்கள்" (யோவா.20:19,20). உயிர்த்தெழுதலில் நம்பிக்கையில்லாமலும், இயேசு தேவனுடைய குமாரன் என்பதை ஏற்றுக்கொள்ளாமலும் இருந்த யூதர்கள் மத்தியில் இயேசுவின் உயிர்த்தெழுதலும் அவர் வாரத்தின் முதல் நாளில் சீஷர்கள் கூடியிருந்த இடத்திற்கு வந்து அவர்களை சந்தித்ததும் சீஷர்களுக்கு சந்தோஷத்தை கொடுத்தது. அவரில் அவர்கள் விசுவாசம் கொள்ளவும் மேலும் தேவனுடைய சத்தியத்தில் நிலைத்திருக்கவும், இந்த சுவிசேஷத்தை உலகமெங்கும் எடுத்துச் சென்று சொல்லவும் அவர்களுக்கு ஊக்கமளித்தது. இயேசுவானவர் உயிர்த்தெழுந்து நாற்பது நாளளவும் அப்போஸ்தலர்களுக்கு தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார். இதனால் அவர்கள் சத்தியத்திற்கு தூணும் ஆதாரமாக இருந்து முதல் நூற்றாண்டில் கர்த்தருடைய சபையைக் கட்டுவதில் தீவிரமாக இருந்தனர். இன்று கர்த்தருடைய சபையில் இருக்கிற ஒவ்வொருவருக்கும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நமக்கு நம்பிக்கையும், சந்தோஷத்தையும் கொடுக்கிறது. நீங்கள் இந்தவிதமான நம்பிக்கையுடையவரா யிருக்கிறீர்களா?

**அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக்குறித்து பலமாய்ச்**



அடுத்ததாக, அவள் என்ன செய்தாள்? '**இயேசுவின் பாதங்கள் முத்தஞ்செய்தாள் அதுவும் ஓயாமல் முத்தம் செய்தாள்**' (வச.37,45). இயேசு இது குறித்து பரிசேயனிடம் சொல்லும்போது, "நீ என்னை முத்தஞ்செய்யவில்லை, இவளோ, நான் உட்பிரவேசித்தது முதல் என் பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்தாள்" (லூக்.7:45) என்றார். அந்நாட்களில் யூதர்கள், கிரேக்கர்கள் மேலும் ரோமர்கள் தங்கள் வீட்டிற்கு வரும் உறவினர் மற்றும் அயலாரை வாழ்த்தி முத்தஞ்செய்வது வழக்கம். இதையே பவுல் "ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள்... என்று ரோமர் 16:16 ல் எழுதியுள்ளார். ஒருமுறை நாங்கள் ஒரு ஊழிய சகோதர தம்பதியாரால் அழைக்கப்பட்டிருந்தோம். நாங்கள் அவர்களது வீட்டு நுழைவாயிலை சென்றடைந்த போது அந்த சகோதரி அச்சமயம் வீட்டின் வெளியே வந்து எங்களைப் பார்த்தும் ஒன்றுமே கூறாமல் உள்ளே போய்விட்டார்கள் இப்படியும் சிலர் இன்றும் இருக்கிறார்கள். ஆனால் இயேசுவின் போதனையும் அப்போஸ்தலரின் போதனையும் முத்தஞ் செய்து வாழ்த்தும் இச்செயல்பாட்டினை எவ்வளவாய் அங்கிகரிக்கிறது என்பதைப் பாருங்கள். எனவே தான் இயேசு பரிசேயனாகிய சீமோனைப் பார்த்து தம்மை வாழ்த்தி முத்தஞ்செய்யவில்லை, அவளோ ஓயாமல் என் பாதங்களை முத்தஞ்செய்தாள் என்றார். அவளது அன்பு பெரிதாகக் காணப்பட்டது. கிறிஸ்தவர்களாகிய நாம் எப்படி நடந்து கொள்ளுகிறோம்? வீட்டிற்கு வரும்படி அழைக்கப்பட்டவர்களை இவ்விதமாக வரவேற்கிறோமா? அல்லது ஏன்தான் இவர்கள் வருகிறார்கள் என்கிறோமா? சிலர் வாயினால் சமீபித்து இருதயத்தினால் தூரமாயிருப்பார்கள். இது கிறிஸ்தவ அன்பு கிடையாது என்பதை மறவாதிருப்போம்.

கடைசியாக, அந்த ஸ்திரீ 'இயேசுவின் பாதத்தில் பரிமளதைலத்தைப் பூசினாள்' என வாசிக்கிறோம். இந்தப் பரிமளதைலம் விலையேறப்பெற்ற தைலமாகும். இது புத்துணர்வை ஏற்படுத்தக் கூடிய ஒன்று. எனவே இயேசு அந்த பரிசேயனைப் பார்த்து: நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை, இவளோ என் பாதங்களில் பரிமளதைலம் பூசினாள்" என்றார் (லுக்.7:45). மேலும் வேத ஆராய்ச்சியாளர்கள் இது குறித்து கூறுகையில் " நான் உபதேசம் பண்ணி, அநேகரை சுகமாக்கும் என் ஊழியத்திற்குப் பிறகு 21 மைல்கள் நீண்ட பயணம் மேற்கொண்டு உன்னிடத்திற்கு வந்தும், நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை என்று சொல்லியதாக விவரிக்கப்படுகிறது. இவ்விடத்தில் இயேசு களைப்புடன் வந்திருக்கும் தமக்கு தலையில் எண்ணெய் பூசி புத்துணர்வு ஏற்படுத்தவில்லை என்பதாக விவரிக்கப்படுகிறது. அத்தோடு கூட "ஆதலால் நான் உனக்குச் சொல்லுகிறேன்; இவள் மிகவும் அன்புகூர்ந் தாளே, .... என்று சொல்லி; அவளை நோக்கி: உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றார்" (லூக்.7:47,48).

எப்பேர்பட்ட அற்புதம் இது! அழிந்து போகும் இவ்வுலகத்தின் ஆசீர்வாதங்களைக் காட்டிலும் பாவத்திலிருந்து விடுதலைகிடைப்பது என்பது அற்புதம் அல்லவா! இதைக்காட்டிலும் வேறே அற்புதத்தை எதிர்பார்க்கிறீர்களா? வேண்டாம். இனிமேலாவது இயேசு கொடுக்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தைப் பெற முயற்சிப்போம். நாம் பாவிகள் தான், இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் என்று விசுவாசித்து அவரிடத்தில் அன்பு கூருவோம். "நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திரிப்பதற்குஅவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்" (1யோவான் 1:7-9). வசனத்தினால் அல்ல கிரியையினால் நம் இயேசுவிடம் அன்பு கூருவோம். தேவ ஆசீர்வாதம் பெறுவோம். உங்கள் சந்தோஷம் நிறைவாய் இருக்கும்படி உங்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன். சமாதானத்தின் கர்த்தர் தாமே எப்பொழுதும் சகலவிதத்திலும் உங்களுக்குச் சமாதானத்தைத் தந்தருளுவாராக. கர்த்தர் உங்களளைவரோடுங்கூட இருப்பாராக! ஆமென்.

இவளுடைய தாழ்மையையும் மனந்திரும்புதலையும் வெளிப்படுத்துகிறது. நமக்கும் இப்பேர்பட்ட தாழ்மை வேண்டாமா?

இரண்டாவதாக, பாவியாகிய **‘ஸ்திரீ இயேசுவின் பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து’** என்று வாசிக்கிறோம். இயேசுவின் பாதங்கள் நனையுமளவிற்கு இவள் கண்ணீர் சிந்தியிருக்கிறாள். அப்போஸ்தலனாகிய பேதுருவும் கூட இயேசுவை மறுதலித்து அவரை தனக்குத் தெரியாது என்று சொல்லி ஆணையிடவும், சபிக்கவும் சத்தியம் பண்ணவும் தொடங்கி, பின்பு தான் சொன்னதை நினைத்துக் கொண்டு வெளியே போய் மனங்கசந்து அழுதான் என்று மத்தேயு 26:69-75 ல் வாசிக்கலாம். தான் செய்த செயலுக்காக மனங்கசந்து அழுதான். நாம் எத்தனை பேர் இவ்விதமாக கர்த்தருக்கு விரோதமாக செய்த பாவங்களுக்காக மனங்கசந்து அழுது மனந்திரும்பியிருக்கிறோம்? இயேசுவுக்கும், தேவனுக்கும் விரோதமாக பாவங்களை செய்து, அதனை தண்ணீரைப் போல பருகி, ஏனோ தானோவென்று இயேசு எனக்குத் தேவை என்று சொல்லி இயேசுவை கடையில் விற்கும் ஒரு பொருளைப் போல எண்ணி அவரைப் பெற விழைகிறோமா? பயத்தோடும் நடுக்கத்தோடும் அவரிடமாய் சேருவோம். இந்த பாவியாகிய ஸ்திரீயைப் போலவும் பேதுருவைப்போலவும் கண்ணீர் சிந்தி மனங்கசந்து அழுது மனந்திரும்புவோம். இவள் செய்த இச்செயலைக் குறித்து இயேசு, தனக்கு விருந்தளித்த பரிசேயனாகிய "…சீமோனை நோக்கி: நான் உன் வீட்டில் பிரவேசித்தேன், நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை, இவளோ, கண்ணீரினால் என் கால்களை நனைத்தாள்…" என்றார் (வச.44). நீ எனக்குச் செய்யாமல் விட்டதை இவள் எனக்குச் செய்தாள் என்றார். பொதுவாக அந்நாட்களில் வீட்டிற்கு வருவோர்க்கு தன்னுடைய பணிவன்பினைக் காண்பிக்கத் தக்க வகையில் கால்களைக் கழுவிட தண்ணீர் தருவர், சிலவேளைகளில் அந்த வீட்டாரே கால்களைக் கழுவிவிடுவர். இதைத் தான் இயேசு இவ்விதமாகக் கூறி அவளுடைய பணிவன்பினை சுட்டிக்காண்பிக்கிறார். இவ்விதமான உபசரணை அந்நாட்களில் கடைபிடிக்கப்பட்டது. ஆபிரகாம் கூட தன்னிடம் வந்த மூன்று புருஷர்களுக்கு எதிர்கொண்டு ஓடித் தரைமட்டும் குனிந்து… கொஞ்சம் தண்ணீர் கொண்டு வரட்டும், உங்கள் கால்களைக் கழுவி, மரத்தடியில் சாய்ந்துகொண்டிருங்கள் என்றான் என ஆதி.18:2-4ல் வாசிக்கிறோம். லாபானும் கூட தன்னிடம் வந்த ஆபிரகாமின் ஊழியக்காரனுக்கும் அவனோடு வந்த மற்றவர்களுக்கும் கால்களைக் கழுவிக்கொள்ளத் தண்ணீர் கொடுத்தான் (ஆதி.24:32) இவ்வாறான வழக்கம் அந்நாட்களில் கடைபிடிக்கப்பட்ட போதும் இந்த பரிசேயனாகிய சீமோன் இயேசுவுக்கு இந்த கனத்தை செய்யத் தவறினான். ஆனால் இவளோ இயேசுவின் பாதங்கள் தன் கண்ணீரினால் நனைத்தாள் எனக் காண்கிறோம்.

மூன்றாவதாக, அவளுடைய செயலைக் குறித்துப் பார்க்கையில், தன்னுடைய கண்ணீரினால் நனைத்த, **‘இயேசுவின் ‘பாதங்களை’ அப்படியே விட்டு விடாமல் தன் தலைமயிரினால் துடைத்தாள்’** என வாசிக்கிறோம் (வச.7:37). ஸ்திரீகளுக்குத் தலைமயிரானது முக்காடாகவும் மகிமையாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது என 1கொரிந்தியர் 11:15 சொல்லுகிறது. மகிமையான தன் தலைமயிரினால் இயேசுவின் பாதங்களைத் துடைத்ததாள் என வாசிக்கும் போது, அவள் இயேசுவை அதிக மேன்மையுள்ளவராக கருதியிருக்கிறாள் என்று தெரிகிறது. பல மைல்கள் பிரயாணத்தில் இயேசுவின் கால்களும் பாதரட்சைகளும் கழுவப்படவும் துடைக்கப்படவும் வேண்டுமென்ற அவசியத்தை அவள் அறிந்திருந்தாள். சுவிசேஷகனுடைய பாதங்கள் எவ்வளவு அழகானது! "….பரிசுத்த வான்களுடைய கால்களைக் கழுவி" நற்கிரியைகளைச் செய்கிற ஸ்திரீகளைப் பற்றி 1தீமோ.5:10 ம் கூட புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவ ஸ்திரீகளுக்கு நல்எடுத்துக்காட்டாக உள்ளது.



**சாட்சிகொடுத்தார்கள்.** முதல் நூற்றாண்டில் உலகத்திற்கு இரட்சிப்பின் வசனம் கொடுக்கப்பட்டது. சத்தியத்தை அறியாதவர்கள் அதைப் பார்த்தார்கள், கேட்டார்கள். ஆனாலும் அவரை அறியாமல் சிலுவையில் அறையும்படியாக ஒப்புக்கொடுத்தார்கள். பிதாவாகிய தேவன் கர்த்தராகிய இயேசுவை உயிர்ப்பித்தார். இதை அப்போஸ்தலர்கள் எருசலேம் துவங்கி சகல நாடுகளுக்கும் சென்று இந்த சுவிசேஷத்தை பிரசங்கித்தனர். "கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சிகொடுத்தார்கள்; அவர்களெல்லார்மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது" எனக் காண்கிறோம் (அப்.4:33). அவர்கள் மிகுந்த பக்திவைராக்கியத்தோடும் வல்லமையோடும் கர்த்தருடைய வசனத்தை சொல்லும்படியாக துணிந்து செயல்பட்டனர். சிதறிப்போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷ வசனத்தை பிரசங்கித்தனர். பேதுரு பிரசங்கிக்கும்போது; "ஜீவாதிபதியைக் கொலைசெய்தீர்கள்; அவரைத் தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார்; அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம்" என்றான் (அப்.3:15). அந்நாட்களில் கிறிஸ்துவைக்குறித்து யாராவது பிரசங்கித்தால் அவர்களுக்கும் மரண தண்டனை கொடுக்கப்படும் அல்லது சிறைச்சாலையில் போட்டு துன்புறுத்துவார்கள். இதையெல்லாம் அறிந்தும் அப்போஸ்தலர்கள் அவர்களுடைய பயமுறுத்தலுக்கு பயப்படாமல் சுவிசேஷவசனத்தை எங்கும் திரிந்து பிரசங்கித்தனர்.

மேலும் அப்போஸ்தலனாகிய பவுல் பிரசங்கிக்கும்போது; "கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், தேவன் எழுப்பாத கிறிஸ்துவை அவர் எழுப்பினாரென்று நாங்கள் தேவனைக் குறித்துச் சாட்சிசொன்னதினாலே, தேவனுக்காகப் பொய்ச்சாட்சி சொல்லுகிறவர்களாகவும் காணப்படுவோமே. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை. கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்" என்ற உன்னதமான செய்தியை கொரிந்திய சபையாருக்கு எழுதியனுப்பிய கடிதத்தில் வாசிக்கிறோம் (1கொரி.15:14-17). இப்படியாக அப்போஸ்தலர்கள் பலமாய் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக்குறித்து சாட்சிகொடுத்தார்கள்.

**கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் உயிர்தெழுதலில் இணைக்கப்படுகிறார்கள் என்பது எத்தனை ஆசீர்வாதமான காரியம்.** நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? அப்படியில்லையென்றால் இன்றே கிறிஸ்தவராக மாற முயற்சியுங்கள். கிறிஸ்துவானவர் உயிர்த்தெழுந்ததைப்போல அவரைப்பின்பற்றுகிற கிறிஸ்தவர்கள் உயிரோடு எழுப்பப்படுவார்கள். "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1கொரி.15:22). ஆதாமுக்குள் பாவத்தில் எல்லாரும் மரிக்கிறார்கள். ஆனால் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானத்திலே எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுகிறார்கள். இந்த உண்மையை நீங்கள் அறிவீர்களா? இந்த உயிர்த்தெழுதலை பிதாவாகிய தேவன் கிறிஸ்துவுக்குள் வைத்திருக்கிறார். அவரைக் கொண்டு உலகத்தை இரட்சிக்கும்படியாக தேவன் திட்டம்கொண்டார். "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர்

உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்" (ரோம.6:3-5). நீங்கள் இந்தவிதமாக வேதாகமம் சொல்லுகிறபடி ஞானஸ்நானம் பெற்று உயிர்த்தெழுதலில் நம்பிக்கையுள்ளவர்களாயிருக்கிறீர்களா? அப்படி இல்லையென்றால் இன்றே உங்களுடைய ஞானஸ்நானத்தைக்குறித்து மறு ஆய்வு செய்யுங்கள். ஒரே ஞானஸ்நானம் தான் உண்டு அது கர்த்தருடைய சபையில், வேதவசனங்களின் அடிப்படையில்! அதற்கு கீழ்ப்படிந்து பாவமன்னிப்புக்கென்று பெற்றுக்கொள்ளும் ஞானஸ்நானம் உங்களை பாவத்திலிருந்து இரட்சித்து கர்த்தருடைய சபையில் சேர்க்கும்.

மேலும், "மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்" 1கொரி.15:49மற்றும் 52 வசனங்கள். மறுரூபம் என்று சொல்லும்போது ஆவிக்குரிய சரீரம் கொடுக்கப்படும். உலகம் உண்டானது முதல் தேவனுடைய வசனங்களின்படி வாழ்ந்தவர்கள் தேவன் ஏற்படுத்தியிருக்கும் பரலோக பாக்கியத்தை அடைவார்கள். இது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது சம்பவிக்கும். இந்த உயிர்த்தெழுதலுக்கு பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான். அந்த பாக்கியவான் களுடைய பட்டியலில் நீங்களும் இருக்கிறீர்களா? அப்படியில்லையென்றால் உங்களையும் அந்தப்பட்டியலில் இணைத்துக்கொள்ள கர்த்தருடைய வசனங்களுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள்.

**அழிவுள்ளது அழியாமையை சுதந்தரிக்குமா?**

இன்றைக்கு அநேகர் அழிந்துபோகிற காரியங்களுக்கு முக்கியதுவம் கொடுத்து பெரிய ஆசீர்வாதங்களை இழக்கின்றனர். "சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது; அழிவுள்ளது அழியாமையை சுதந்தரிப்பதுமில்லை" என அப்போஸ்தலனாகிய பவுல் தெளிவாக எழுதியிருக்கிறார் (1கொரி.15:50). உலகம், உலகம் என்று சதா உலகத்தைப் பிடித்துக்கொண்டிராதீர்கள். அன்பானவர்களே, உலகம் உலகத்தை சிநேகிக்கும். ஆனால் உலகத்திலிருந்து நம்மை பிரித்தெடுக்கும்படியாக வந்தவர் ஆண்டவர் இயேசு. அவருடைய வசனங்களுக்குச் செவி கொடுத்து, மாம்ச இச்சையிலிருந்து விடுபடுங்கள். தேவன் நமக்குக்கொடுத்த ஆவி மட்டுமே, தன்னைத்தந்த தேவனிடத்திற்குத் திரும்பும். மற்றவைகள் எல்லாம் உலகத்தில் உண்டானவைகள் இவைகள் உலகத்திலே அழிந்துபோகும். ஆகையால் அழிந்துபோகும் காரியங்களில் உங்களுடைய கவனத்தை செலுத்தாமல் நித்திய ஜீவன் வரை நிலைத்திருக்கும் கர்த்தருடைய வசனத்திற்கு உங்களுடைய செவியைசாய்த்து, நித்திய வாழ்வை சம்பாதித்துக்கொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

- கொரோனா காலத்தில் நம்மை பாதுகாத்த தேவனுக்கு நன்றி சொல்லி... ஜெபியுங்கள்
- நாம் எதிர் நோக்கியிருக்கிற புதிய ஆண்டிற்காக...
- 2021 ல் பல நல்ல தீர்மானங்களை எடுக்க...
- ஒவ்வொரு கிராமத்திலும் கர்த்தருடைய சபை எழும்ப...
- புதிய ஆண்டில் தேசம் நல்ல தலைவர்களை பெற்றிட...
- தேவசித்தம் பூமியிலே நிறைவேற்றப்பட...
- நமது மாத இதழை அநேகர் பெற்றிட...





பெண்கள் பகுதி

# பாவியாகிய ஒரு ஸ்திரீ

**A Woman, Who was a sinner** *-Glory Arjunan*



அன்பான சகோதரிகளே, இவ்வுலக ஜீவியத்தில் நம் அனைவருக்கும் அநேக தேவைகள் உண்டு அன்றாட வாழ்க்கையில் நாம் அநேக காரியங்களை சார்ந்தே வாழ்கிறோம். உண்ணவும், உடுக்கவும் வாழவும் நமக்கு என்னென்ன தேவையோ அவைகளெல்லாவற்றைக் காட்டிலும் நம்முடைய ஆன்மீக வாழ்வுக்கு இயேசு கிறிஸ்து மிக மிக தேவையானவராக, அவசியமானவராக இருக்கிறார். இயேசு உலகத்திலுள்ள அனைவருக்குமே தேவை! தேவை!! தேவை!!!.... இயேசுவை தம்முடைய மெய்தேவனாகப் பெறாமல் மரிக்கிற எந்த நபரின் முடிவும் பரிதாபமே! கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராகப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால், நாமனைவரும் பாவிகள் தான், பாவிகளின் பரிகாரி இயேசு ஒருவர் தான், அவர் நமக்குத் மிக மிகத் தேவை என்று உணரவேண்டும். இப்படி உணர்ந்து கொண்ட ஒரு ஸ்திரீயைப் பற்றிதான் இப்போது ஆராயப்போகிறோம். வேதாகமத்தில் இவளுடைய பெயர் குறிப்பிடப்படவில்லை, ஆனால் இவள் நாயீன் என்ற ஊரில் எல்லாராலும் பாவியாகிய ஒரு ஸ்திரீ என்று அறியப்பட்டவளாக இருந்தாள். இவளைப் பற்றி வேதாகமம் லூக்கா 7ம் அதிகாரம் வசனங்கள் 37-50 வரை விளக்கிச் சொல்லுகிறது. இவளுடைய ஐந்து கிரியைகள் நமக்கு என்ன பாடத்தினைக் கற்றுக் கொடுக்கிறது எனக் காண்போம்.

லூக்கா 7:37-38 ல் "அப்பொழுது அந்த ஊரிலிருந்த பாவியாகிய ஒரு ஸ்திரீ அவர் (இயேசு) பரிசேயன் வீட்டிலே பந்தியிருக்கிறதை அறிந்து, ஒரு பரணியில் பரிமளதைலம் கொண்டு வந்து, அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுது கொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து தன் தலைமயிரினால் துடைத்து அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து, பரிமளதைலத்தைப் பூசினாள்" என வாசிக்கிறோம்.

முதலாவது, பாவியாகிய இந்த '**ஸ்திரீ இயேசுவின் பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுதுகொண்டு**' என வாசிக்கிறோம். ஏன் அழுது கொண்ட நின்றாள்? ஒருவேளை தான் பாவியென்று அந்த ஊருக்கே தெரியும், தான்பாவியென்பதால் அங்கிருந்த ஜனங்கள் இவளை ஏற்றுக் கொள்ளாமல் புறம்பே தள்ளியிருக்கலாம் அல்லது தன்னுடைய பாவ வாழ்க்கையை நினைத்து மனம் வருந்தினவளாக இருந்திருக்கலாம் அல்லது தான் பாவியாக இருந்ததால் இயேசுவும் தன்னை ஏற்றுக்கொள்ளாமல் போய்விடுவாரோ என்று நினைத்திருக்கலாம் அல்லது ஒட்டுமொத்தமாக தன் பாவங்களுக்காக மனம்வருந்தி இயேசுவுக்கு முன்பாக வரத்துணியாமல் அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுது கொண்டிருக்கலாம். எப்படியோ தன்னை தாழ்த்தி அழுதுகொண்டிருந்தாள் என்று தான் நினைக்கத் தோன்றுகிறது. பூமியில் ஒருவரும் நீதிமான் அல்ல என்பது நமக்கு நன்றாகத் தெரியும். வேதம் கூறுகிறபடி ஆதாமின் கீழ்ப்படியாமையினாலே பாவம் நமக்குள் பிரவேசித்துவிட்டது (ரோம.5:12,19) நாம் பாவிகளாக்கப்பட்டோம். பாவிகளாகிய நம்மெல்லாருக்கும் பரிசுத்தராகிய இயேசு தேவை. பொதுவாக யூதர்கள், கிரேக்கர், ரோமர்கள் உணவு உண்ணும்போது தாங்கள் அமர்ந்திருக்கும் இருக்கையிலிருந்து தங்கள் கால்களை பின்புறமாக நீட்டி உட்கார்ந்து உணவு உண்பார்கள் என வேத ஆராச்சியாளர்கள் கூறுகின்றனர் இவளோ இயேசுக்கு பின்னாக வந்தது மட்டுமல்லாது கண்ணீர் சிந்தி அழுதுகொண்டு நின்றிருக்கிறாள். இது

உள்ளவராயிருக்கிறார். நாம் பாவஞ்செய்யவில்லையென்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது" (1யோ.1:6-10).

VI. **என்னுடைய புதிய பிதா எனக்கு என்ன வாக்குத்தத்தத்தை ஏற்படுத்துகிறார்?**

1. நாம் அவருக்குள் கீழ்ப்படிந்தால், நம்மில் தேவ அன்பு பூரணப்பட்டிருக்கிறது. "அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்; நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம்" (1யோவா.2:5).

2. நாம் சுமப்பதற்கு அரிதான பாரங்களைச் சுமக்கும்படி தேவன் நம்மை அனுமதிக்கமாட்டார். அவர் நாம் அவரில் கொண்டுள்ள நம்முடைய பெலத்தையும் நம்முடைய சவால்களையும் அளக்கிறார். "மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்" (1கொரி.10:13)

3. அவர் நம்மேல் ஆசீர்வாதங்களைப் பொழிந்தருளுவார். "நீதிமானுடைய சிரசின்மேல் ஆசீர்வாதங்கள் தங்கும்..." (நீதி.10:6).

4. நம்முடைய குறுகிய மனுஷ தரிசனங்களின்படியும் ஞானத்தின்படியும் எல்லாம், நமக்கு நன்மையானவை எதுவென்று அவர் கண்காணிக்கிறாரோ அதற்கேற்றபடி ஒவ்வொரு ஜெபமும் பதிலளிக்கப்படும். "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்" (மத்.7:7,8).

5. நாம் விசுவாசமுள்ளவர்களாயிருந்தால், சில வகையில் நாம் துன்பத்தை அநுபவிப்போம். "... கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் (2தீமோ.3:12).

6. நாம் கீழ்ப்படிதலுள்ளவர்களாயிருந்தால், நமது சகோதரர் பிதாவினிடத்தில் நமக்காகப் பரிந்து பேசுகிறார்: "என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" (1யோவா.2:1,2).

"ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்?

கிறிஸ்துவே மரித்தவர், அவரே எழுந்துமிருக்கிறவர், அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர் நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே" (ரோம.8:34).

7. இறுதியில் "அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோம.8:28). - தொடரும்

'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' மாத இதழை ஒவ்வொரு மாதமும்
10ம் தேதியே Whatsapp மூலம் பெற்றுக்கொள்ள 6379350509
என்ற எண்ணோடு தொடர்பு கொள்ளுங்கள்



# இன்று ஏன் ஒரே ஞானஸ்நானம் உண்டு?

## WHY THERE IS BUT ONE BAPTISM TODAY?

-J.C.Choate



இதைக் குறித்து நீங்கள் எச்சரிக்கையுடையவர்களாக இருக்கிறீர்களோ அல்லது இல்லையோ நான் அறியேன், ஆனால் கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டிருக்கிறவர்கள் மத்தியில் அநேக ஞானஸ்நானங்கள் உண்டென போதிக்கிறவர்கள் இருக்கின்றனர். அவைகளில் தண்ணீரில் மூழ்குவதால் ஞானஸ்நானம், ஒருவனுடைய தலையில் தண்ணீரை தெளிப்பதால் ஞானஸ்நானம், ஒருவனுடைய தலையில் தண்ணீரை ஊற்றி ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் இன்னும் இதுபோன்ற பல முறைகளில் ஞானஸ்நானம் உண்டெனக் கூறப்படுகிறது, இந்தக் காரியத்தைக் குறித்து போதிக்கிறவர்களுடைய கருத்துப்படி ஞானஸ்நானத்திற்கு பல வேறுபட்ட நோக்கங்கள் உள்ளன. பலர், ஞானஸ்நானமானது ஒருவனுடைய இரட்சிப்பிற்கான அடையாளமென கூறுகின்றனர் மற்றவர்கள் ஞானஸ்நானமானது பாவங்களின் மன்னிப்புக்கென்றும், ஒருவனை கிறிஸ்துவுக்குட்படுத்துவதற்கென்றும், அவருடைய சபைக்குள் சேர்ப்பதற்கென்றும் என போதிக்கின்றனர்.

வேதாகமம், ஒரே ஒரு ஞானஸ்நானம் மட்டுமே உண்டென்று போதிக்கிறது. பவுல் "உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும் ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும், பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லாரோடும் உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்" (எபே. 4:4-6) என்கிறார். ஒரே தேவனும், ஒரே கர்த்தரும் அல்லது கிறிஸ்துவும், ஒரே ஆவியும் அல்லது பரிசுத்த ஆவியும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், ஒரே சரீரமும், ஒரே நம்பிக்கையும் உண்டென தேவ ஆவியினால் ஏவப்பட்ட தேவமனிதன் சொன்னதை தயவு செய்து கவனியுங்கள் இவையெல்லாவற்றிற்கும் மேலாக, அவன் ஒரே ஞானஸ்நானம் உண்டென வலியுறுத்திக் கூறுகிறான். ஒரே தேவனும், ஒரே கிறிஸ்துவும், இன்னும் இதுபோல் மற்றவைகளும் ஒரே காரியமாக இருக்கிறதாக பொருள்படுமானால் பிறகு ஒரே ஞானஸ்நானம் என்பதும் ஒரே ஞானஸ்நானம் தானே.

ஆனால் இது எந்த ஞானஸ்நானமாக இருக்கும்? இன்று மனுஷர் பேசுகின்ற ஞானஸ்நானத்தைத் தவிர, வேதவாக்கியங்களிலும் கூட பல்வேறு ஞானஸ்நானங்களைப் பற்றி நாம் வாசிக்கிறோம், உதாரணமாக, லூக்கா 7:29-ல் ஜனங்கள் யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொண்டதாக வாசிக்கிறோம், கிறிஸ்து தம்மை சோதிக்கும்படி வந்த ஒரு பிரிவினரை நோக்கி "யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ, மனுஷரால் உண்டாயிற்றோ, எனக்கு உத்தரவு சொல்லுங்கள் என்றார்" (மாற்கு 11:30). கிறிஸ்து யோவானால் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார் (மத். 3:13-17), கிறிஸ்து எல்லா நீதியையும் நிறைவேற்றும்படிக்கு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபோதிலும், பொதுவாக ஜனங்கள் சபையாகிய கர்த்தருடைய ராஜ்யத்தின் வருகைக்கு ஆயத்தப்படும்படிக்கு ஞானஸ்நானம் பெற்றார்கள், ஆனபடியினால் இது மனந்திரும்புதலுக்கான ஞானஸ்நானம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது (லூக் 3:3). பவுல் எபேசுவில் யோவானுடைய ஞானஸ்நானத்தின்படி ஞானஸ்நானம் பெற்றிருந்த சில

மனுஷரை எபேசுவில் கண்டான், ஆனால் அவர்கள் ஆவி அல்லது பரிசுத்த ஆவியைப்பற்றி கேள்விப்படாதவர்களாயிருந்தனர், ஆனபடியினால் அவன் அதன்பிறகு யோவானுடைய ஞானஸ்நானத்தின் நோக்கத்தைக் குறித்த காரியங்களை அவர்களுக்குப் போதித்தான். “யோவான் தனக்குப்பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்கவேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான், அதைக்கேட்ட போது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்” (அப்.19;1-5). யோவானுடைய ஞானஸ்நானமானது சந்தேகத்திற்கு இடமளிக்கவில்லை. இது ஒரு நோக்கத்தை நடப்பித்தது அதன்பின் அது இல்லாமல் முடிவடைந்தது.

மத்தேயு 3;11, 12-ல் யோவான் ஸ்நானகன், அல்லது ஞானஸ்நானங்கொடுத்த யோவான் அல்லது தண்ணீரில் மூழ்கச்செய்தவன் கிறிஸ்து கொடுப்பாரென இரு வகையான ஞானஸ்நானங்களைப் பற்றி பேசினான், நாம் வாசிக்கிறோம், “மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன், எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார், தூற்றுக்கூடை அவர்கையில் இருக்கிறது, அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான்.” இங்கே யோவான், கிறிஸ்து எவ்வாறு ஜனங்களை நடத்துவார் என்பதை அறுவடை செய்கிற ஒருவராக படம்பிடித்து சுட்டிக்காட்டி விளக்குகிறான், அந்நாட்களின் ஜனங்கள் கோதுமை அறுவடையைக் குறித்து நன்கு அறிந்தவர்களாயிருந்தனர். அந்த கோதுமை கதிரடிக்கப்படும், பின்பு காற்றின் உதவியினாலோ அல்லது தூற்றுக்கூடையினாலோ பதரெல்லாம் தூற்றப்பட்டு கோதுமை மணிகள் பிரித்தெடுக்கப்படும், அந்த கோதுமை சேகரிக்கப்பட்டு உணவுக்காக பத்திரப்படுத்தப்படும் ஆனால் பதர் அல்லது உபயோகமற்ற பொருள் சுட்டெரிக்கப்படும். இந்த முறையிலே கிறிஸ்து பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பாரென யோவான் கூறினான், அதன்பிறகு, இயேசு தேற்றரவாளர் அல்லது பரிசுத்த ஆவியை அப்போஸ்தலருக்கு அனுப்புவேன் என்பதாக அவர்களுக்கு வாக்குப்பண்ணினார் (யோவா 15:26; யோவா. 16:7, 13) அப்போஸ்தலர் 1:8ல் மீண்டும் அவர் அவர்கள் மேல் பரிசுத்த ஆவியை அனுப்புவேன் என்பதாக வாக்குப்பண்ணினார். லூக்.24:49யும் வாசியுங்கள்.

அப்போஸ்தலர் 2ல் பரிசுத்த ஆவி அப்போஸ்தலர்கள்மேல் ஊற்றப்படுகிறதையும், கிறிஸ்து அவர்களுக்குப் போதித்திருந்த சகலத்தையும் நினைப்பூட்டும் படிக்கும் அந்நிய பாஷைகளில் பேசும்படிக்கும் அற்புதங்களை நடப்பிக்கும்படிக்கும் அவர்களுக்கு வல்லமை கொடுக்கப்படுகிறதையும் வாசிக்கிறோம். இவர்கள் மூலம் சகலமும் ஆசீர்வதிக்கப்படும். ஆனால் கிறிஸ்து அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பாரென்றும் யோவான் சொன்னான். இது எதற்கு ஒப்பிடப்படுகிறது? எது இரட்சிக்கப்படும், கோதுமையானது நீதியைக் குறிக்கிறது பின்பு எது சுட்டெரிக்கப்படும், பதர், துன்மார்க்கத்தைக் குறிக்கிறது, கிறிஸ்து அப்போஸ்தலரை பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானப்படுத்துவார், ஆனால் அவர் துன்மார்க்கரையோ அக்கினியினால் ஞானஸ்நானப்படுத்துவார். ஞானஸ்நானமானது தண்ணீரில் மூழ்கடிக்கப்படுதல் என்றும் ஆனபடியினால் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் மூழ்கடிக்கப்பட்டார்கள் அல்லது



**முடியுமா?**

1. சகல பொறுப்புள்ள மனுஷரும் பாவஞ்செய்துள்ளனர் (ரோம.3:23). வேதாகமம் முழுவதிலும் ஒரு பாவமுள்ள மனிதன் தம்மை சுத்திகரித்துக் கொள்ள முடியுமென்ற எண்ணத்தை ஆதரிக்கிற வாக்கியம் ஒன்றுமில்லை. ஒரு நல்ல செயலும் கெட்ட செயலை சரியசெய்ய முடியுமென்ற எண்ணத்தை ஆதரிக்கிற வேதவசனமும் இல்லை.

2. ஆதியாகமம் 3:15ன்படி ஸ்திரீயின் வித்து (கிறிஸ்து) சாத்தானை நசுக்குவார், மனுஷனுடைய நம்பிக்கை பழுதற்ற பலி ஆட்டுக்குட்டி, நமது கர்த்தரின் இரத்தம் சுத்திகரிக்கின்றது என்பது தேவனுடைய வார்த்தையின் செய்தியாயிருக்கிறது. நம்முடைய பாவங்கள் துடைக்கப்பட்டு போகும்படிக்கு நாம் அவருடைய இரத்தத்தால் கழுவப்படவேண்டியுள்ளது "அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா?... ஆயினும் நீங்கள் இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள். (1கொரி.6:9,11) "இயேசுகிறிஸ்து ... நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவினார்..." (வெளி.1:5).

## IV. **இரட்சிக்கப்படும்படிக்கு நான் என்ன செய்ய வேண்டும்?**

1. சுவிசேஷத்தைக் கேள்விப்படவேண்டும் (ரோம.10:17)
2. இயேசு தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்க வேண்டும் (மாற்.16:15,16).
3. பாவங்களுக்கு மனந்திரும்ப வேண்டும் (லூக்.13:3; அப்.2:38).
4. தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும் (மத்.10:32; அப்.8:37).
5. பாவங்களின் மன்னிப்புக்கென்று கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் (அடக்கம்) பண்ணப்பட வேண்டும் (அப்.2:38; ரோம.6:3,4).

## V. **இப்போது கிறிஸ்துவின் இரத்தத்தில் புதிதாகக் கழுவப்பட்ட நான் தேவனுடைய பார்வையில் எப்படிக் காணப்படுகிறேன்?**

1. "நீங்கள் வளரும்படி புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்" (1பேது.2:3).

2. புதிய கிறிஸ்வர்களாகிய நமது பொறுப்பு மனப்பக்குவமுள்ளவர்களாக வளரவேண்டியதாயிருக்கிறது. "ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்" (1பேது.2:5).

3. நாம் இனிமேலும் பாவிகளாக இருக்கவில்லையா?

"நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும் இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய்சொல்லுகிறவர் களாயிருப்போம். அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்".

"நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும்

பெண்கள் பகுதி

## ஒரு கிறிஸ்துவளாக என்னுடைய சொந்த வாழ்க்கையும் வளர்ச்சியும்

My Personal Life and Development As a Christian

*-Betty*



**முன்னுரை:**

எந்த ஒரு செயல்களையும் செல்வாக்கினையும் காணும் முன், நான் ஒரு கிறிஸ்தவ பெண்ணாக இருக்க முடியும், நான் ஒரு நபராக - ஒரு ஆத்துமாவாக தேவனுடைய குடும்பத்தில் என்னுடைய சொந்த முன்னேற்றத்தைக் காணவேண்டும்.

**I. பல பிரிவினை ஜனங்கள் மத்தியில் குழந்தைகள் பிறக்கிறபோது ஏற்கனவே ஆதாம் மற்றும் ஏவாளின் பரம்பரை பாவத்துடன் பிறக்கின்றனர் என்ற தவறான தகவலின் பேரிலான நம்பிக்கை காணப்படுகிறது.**

1. நாம் வேதவாக்கியங்களை உற்று நோக்குவோமானால் இந்த நம்பிக்கை 100 சதவீதம் தவறானது என்று காண்போம்.

A) இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள் (சங்.51:5). மனுஷர் பிறப்பிலிருந்தே பாவிகளாக எண்ணப்படுகின்றனர் என்று நிரூபிக்க இந்த பகுதி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இது குழந்தை தாவீது பாவியாக இருந்தார் என்று சொல்லவில்லை, ஆனால் அவனுடைய தாய் - வயது முதிர்ந்த மனுஷியாக துர்க்குணத்தின் உலகில் வாழ்ந்து வந்தாள் - பாவியாக இருந்தாள்.

B) "இயேசு "...சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது..." என்றார் (மத்.19:14).

C) மனுஷர்கள் அழைக்கப்பட்டனர், "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். ... என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்...." (மத்.11:28,29). குழந்தைகளும் சிறுபிள்ளைகளும் கிறிஸ்துவிடம் வருவதைத் தெரிந்தெடுக்க அல்லது பொறுப்பாகிய அவரது நுகத்தை சுமக்க, அல்லது தங்களுடைய சுயதீர்மானத்தின்படி அவரிடத்தில் கற்றுக்கொள்ள முடியாது.

**II. நாம் பாவத்துடன் பிறக்கவில்லையென்றால், வேறு எவ்வகையில் தேவனுடைய பார்வையில் பாவிகளாக மாறுகிறோம்?**

1. நாம் எது சரி, எது தவறு என்று அறியும் மனத்திறனைப் பெறும்போது பாவிகளாக மாறுகிறோம். அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும் போது, மரணத்தைப் பிறப்பிக்கும்" (யாக்.1:14,15).

2. நாம் சரியானவற்றைச் செய்யத் தவறும் போது பாவஞ்செய்கிறோம். "ஆதலால் ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்" (யாக்.4:17). தேவன் நாம் செய்யும்படிக்குக் கொடுத்திருக்கிற வேலையைச் செய்ய உதாசினம் செய்வதன் மூலம் கிறிஸ்தவர்கள் வெளிப்படையாக தவறு செய்வதைக் காட்டிலும் அடிக்கடி அதிகமாக பாவஞ் செய்கின்றனர்.

**III. ஒரு பாவியாக இருக்கையில் இரட்சிக்கப்படும்படிக்கு நான் போதுமான அளவு நல்லவளாகவும் போதுமான அளவு நற்கிரியைகள் செய்பவளாகவும் இருக்க**



நிரப்பப்பட்டார்கள், கிறிஸ்து அக்கினியினால் ஞானஸ்நானம் கொடுப்பாரென இவ்வார்த்தை சொல்லுகிறபோது துன்மார்க்கர் அக்கினியினால் அமிழ்த்தப்படுவார்களென இது அர்த்தமாகிறதென்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறாக துன்மார்க்கர் தீர்க்கப்படுவார்களென தேவவாக்கியங்களில் நாம் எங்கே வாசிக்கிறோம்? முதல் இடத்தில் ஒருநாள் கிறிஸ்து உலகத்தை நியாயந்தீர்ப்பாரெனவும் துன்மார்க்கர் நரகத்திலே தள்ளப்படுவார்களெனவும் (2பேது 2:4) அல்லது அவர்கள் நித்திய ஆக்கினையை அடையப் போவார்களெனவும் (மத்.25:46) நாம் அறிவிக்கப்படுகிறோம். மீண்டும் நரகம் ஒரு அக்கினிகடல் என விவரிக்கப்பட்டுள்ளது (2பேது 3:7, யூதா 7, வெளி.2:10,14; 21:8) துன்மார்க்கர் தேவனை அறியாதவர்கள் இழந்து போனவர்கள் நித்திய அழிவாகிய அக்கினி கடலில் மூழ்கடிக்கப்படுவார்கள், அல்லது அமிழ்த்தப்படுவார்களென அர்த்தமாகிறது. நிச்சயமாக இருதயத்தில் செம்மையான ஒருவனும் அக்கினியால் ஞானஸ்நானம் பெற விரும்பமாட்டான்.

பவுல் 1 கொரி.10:1-4ல் இவ்வாறு எழுதினான் " இப்படியிருக்க, சகோதரரே நீங்கள் எவைகளை அறிய வேண்டுமென்றிருக்கிறேனென்றால், நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்கு கீழேயிருந்தார்கள் எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள் எல்லோரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள். எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில் அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்த கன்மலை கிறிஸ்துவே" அந்நாட்களில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வது தேவையானதாகக் கருதபடாமலிருந்த போதிலும்கூட சமுத்திரத்தின் வழியே நடந்துவந்த இஸ்ரவேல் ஜனங்களைத் திரும்பிப்பார்த்து, அவர்கள் மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்களென விவரித்தான், வேறுவிதமாக கூறுவோமானால், அவர்கள் மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் அடக்கம் பண்ணப்பட்டார்கள் அல்லது மூழ்கடிக்கப்பட்டார்கள்.

செபெதேயுவின் குமாரருடைய தாய் கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தில் தம்முடைய குமாரராகிய இரண்டு பேரில் ஒருவன் அவருடைய வலது பாரிசத்தில், ஒருவன் இடது பாரிசத்தில் உட்கார கிறிஸ்து அனுமதிக்க வேண்டுமென விண்ணப்பித்த போது, "இயேசு பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை, நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா என்றார். அதற்கு அவர்கள் கூடும் என்றார்கள். அவர் அவர்களை நோக்கி: என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்; ஆனாலும் என் வலது பாரிசத்திலும் என் இடது பாரிசத்திலும் உட்கார்திருக்கும்படி என் பிதாவினால் எவர்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கேயல்லாமல் மற்றொருவருக்கும் அதை அருளுவது என்காரியமல்ல என்றார்" என நாம் வாசிக்கிறோம் (மத்.20:22,23). மீண்டும் கிறிஸ்து ஆகிலும் நான் மூழ்கவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு,....(லூக் 12:50) என்றார். ஞானஸ்நானமானது பாடுகளினால் அவர் நெருக்கப்படுகிறேன் என சிலுவையின் மேல் தம்முடைய பாடுகளைக் குறித்து இங்கே கிறிஸ்து பேசுகிறார். உண்மையாகவே அவர் ஒரே ஒருமுறை இந்தப்பாடுகளின் வழியே சென்றார்.

கடைசியாக, வேதவாக்கியங்கள் விசுவாசிகளின் ஞானஸ்நானத்தைக் குறித்து பேசுகிறது. இந்த ஞானஸ்நானமானது தண்ணீரில் பெறுவதாகும் (அப்.8:26-39) ஒரு

அடக்கம் (கொலோ.2:12; ரோமர் 6:3,4), பாவமன்னிப்புக்கென்று பெறுவதாகும் (அப்.22:16), இரட்சிக்கப்படும்படி பெறுவதாகும் (1 பேது 3:21), மேலும் ஒருவன் சபைக்குள் சேர்க்கப்பட பெறுவதாகும் (1 கொரி. 12:13). இது கிறிஸ்துவின் நாமத்தில் (அப்.2:38) அதாவது பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் (மத்.28:19,20) நடைபெற வேண்டியதாயிருந்தது. கிறிஸ்து நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:15, 16) என்றார்.

எபேசியர் 4:4-6க்குத் திரும்புகையில் பவுல் ஒரே ஞானஸ்நானம் மட்டுமே உள்ளது என குறிப்பிட்டதை நினைவுகூருங்கள். இந்தக் கூற்றை அவன் கூறின அந்த சமயம் கிட்டத்தட்ட 64 AD யாக இருந்தது. ஆனால் வேதவாக்கியங்களில் நாம் வாசிக்கின்ற எல்லா ஞானஸ்நானத்திலும் எது ஒரே ஞானஸ்நானமாயிருக்கும்? எந்த சமயத்திலும் ஒரு ஞானஸ்நானமானது தண்ணீரில்லாத ஞானஸ்நானம் அல்லது விசுவாசிகளின் ஞானஸ்நானம், இது எப்போதும் குறிப்பிடப்பட்டுள்ளது என உற்று கவனிப்பதற்கு என்று ஒரு சிறந்த விதியாயிருக்கும். வேறு வகையில், வேதவாக்கியங்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் மற்றும் அக்கினி ஞானஸ்நானம் யோவானுடைய ஞானஸ்நானம், பாடுகளின் ஞானஸ்நானம் மேலும் மேகங்களில் மற்றும் சமுத்திரத்தில் ஞானஸ்நானம் போன்றவற்றைப் பற்றி பேசுகின்றன. ஆனபடியினால் நாம் எபேசி. 4:4-6ல் குறிப்பிடப்பட்டுள்ள ஒரே ஞானஸ்நானத்தைப்பற்றி வாசிக்கையில் நாம் இது விசுவாசிகளின் ஞானஸ்நானத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளது என முடிவுக்குவர வேண்டும்.

நிச்சயமாகவே இன்று பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் நம்முடைய நாட்களிலுள்ள ஜனங்களுக்கென்று கொடுக்கப்பட்டுள்ளதென ஜனங்கள் பேசுகின்றதை நாம் கேள்விப்படுகிறோம், ஆனால் அந்த ஞானஸ்நானமானது கிறிஸ்துவினால் அப்போஸ்தலருக்கென்று வாக்குப்பண்ணப்பட்டிருந்தது, மேலும் அவர் ஒருவரே அதைக் கொடுக்கிறவராயிருந்தார். அந்த ஞானஸ்நானம் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக கொடுக்கப்பட்டபடியினால், இன்று ஒருவரும் அந்த ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்க முடியாது, தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பற்றி போதிக்கிற மற்றவர்கள், இரட்சிக்கப்பட்ட விசுவாசி தான் இரட்சிக்கப்பட்டவராயிருக்கிறாரென காண்பிக்கும்படிக்கு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளலாம் என உரிமைபாராட்டுகிறவர்கள் உண்டு, அவர்கள் சரியாக இருந்தால் கிறிஸ்துவுக்கு வெளியேயும் அவரது சபைக்கு வெளியேயும் இரட்சிக்கப்பட்டவராயிருக்கிற விரும்பும் ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளும் அவருடைய சபைக்குள்ளும் பிரவேசிப்பதற்கு கண்டிப்பாக ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டுமென தேவனுடைய வார்த்தை சொல்லுகிறபடியினால் ஞானஸ்நானம் பெறவேண்டும் என அர்த்தமாகிறது (கலா. 3:26,27; 1கொரி.12:13). இவ்விஷயத்தில் இப்பேர்பட்ட ஜனங்கள் தவறுகின்றனர் என்பதை நாம் அறிவோம். ஒருவன் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து தண்ணீரில் அடக்கம் என்ற அந்த பகுதியில் இணையாத வரை அவன் இரட்சிக்கப்பட்டவனாயிருக்க முடியாது.

ஞானஸ்நானப்படுத்துவதற்காக தெளித்தல் அல்லது ஊற்றுதல் என்பது தேவனுடைய வார்த்தையின் போதனைக்குத் தூரமானது. ஞானஸ்நானம் பெறும்படிக்கு தலையில் தண்ணீரை தெளிப்பது மற்றும் ஊற்றுதல் பற்றிய எந்த வழியும் சொல்லப்படவில்லை. ஞானஸ்நானமானது ஒரு அடக்கமாகும், ஒரு முழுகுதல் ஆகும். தெளித்தல் என்பது தெளித்தலே, ஊற்றுதல் என்பது ஊற்றுதலே, ஆனால் ஞானஸ்நானமாகாது. இந்தவிதமான பழக்கங்கள் மனிதனால் உருவாக்கப்பட்டவை.



இருந்தது, அது பரவ வேண்டும் என்பதற்காக அல்ல. ஏனென்றால் நாம் வேதாகமத்தை விசுவாசிக்கிறோம், அற்புதங்கள் நடந்தன என்பதை விசுவாசிக்கிறோம். அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் ஜீவித்தார்கள் என்பதையும் விசுவாசிக்கிறோம். இதே காரணத்திற்காக நாம் அற்புதங்கள் முடிவடைந்துவிட்டன என்பதையும் அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் இன்றைக்கு இல்லை என்பதையும் நாம் விசுவாசிக்றோம். அற்புதங்கள் நடந்தன, அவைகள் முடிவடைந்து விட்டன என்பதை தெளிவாக போதிக்கிறது. அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் கொடுக்கப்பட்டார்கள், அவர்கள் எடுத்துக் கொள்ளப்பட்டார்கள், அவர்கள் எடுத்துக்கொள்ளப்பட்டார்கள் என்பதை வேதாகமம் தெளிவாக வெளிப்படுத்துகிறது. ஒரே வேதாகமம்தான் இவ்விரண்டையும் போதிக்கிறது. இதன் காரணமாகவே நாம் இன்றைக்கு சபையிலே அப்போஸ்தலர்களையும், தீர்க்கதரிசிகளையும் காண முடிகிறதில்லை. இவைகள் தற்காலிகமான பணிகளாகவே இருந்தன. நிரந்தரமானவைகளாக அல்ல. எவர் ஒருவர் இன்றைக்கு அப்போஸ்தலர் மற்றும் தீர்க்கதரிசிகள் இருப்பதாக வாதம் செய்கிறார்களோ அவர்கள் பொய்யராயிருக்கிறார்கள் (வெளி.2:2) ஆரம்பத்திலிருந்தே கள்ள அப்போஸ்தலர்கள் இருந்தார்கள் (2கொரி.11:13) மனுஷர் எப்பொழுதும் பொய்யான அடையாளங்களோடும், அற்புதங்களோடும் தோன்றுவார்கள் (2தெச.2:8,9). அநேகர் அடையாளங்களையும், பலத்த செய்கைகளையும் நடப்பிப்பதாக சவால் விடுவார்கள், ஆனால் இயேசு அவர்களை ஒருபோதும் அறியேன் என்றார் (மத்.7:22,23) அப்போஸ்தலரும், தீர்க்கதரிசிகளும் தற்காலிகமானவர்களாயிருந்தார்கள், ஆதி சபையிலே அவர்கள் நிரந்தரமானவர்களாக இருக்கவில்லை.

கேள்விகள்

1. ஒரு காலத்தில் அற்புதங்கள் நடப்பிக்கப்பட்டன என்று வேதாகமம் போதிக்கிறதா?----------------

2. அற்புதங்கள் தொடர்ந்து நடைபெறும் என்று வேதாகமம் போதிக்கிறதா? ----------

3. அப்போஸ்தலர்கள் ----------- ------------- நடத்தப்படுவார்கள் என்று யோவான் 16:13 உரைக்கிறது.

4. அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் என்பவர்கள் சபையின் ---------- இருந்தார்கள் என்று எபேசி.2:20 உரைக்கிறது.

5. தேவனானவர் சபையிலே சிலரை ------------ ------------- ஏற்படுத்தினார் என்று 1கொரி.12:28 உரைக்கிறது.

6. 2கொரி.12:12 சொல்கிறது அப்போஸ்தலர்கள் ஒரு அப்போஸ்தலனுக்குரிய ---------- வெளிப்படுத்தினார்கள் என்று.

7. எபி.2:3,4 வசனங்கள் உரைக்கின்றன தேவன் ------------- -------- சாட்சி கொடுத்தார்கள் என்று.

8. விசுவாசம் பரிசுத்தவான்களுக்கு ---------- ஒப்புக்கொடுக்கப்பட்டது என்று யூதா 3 சொல்கிறது.

9. வெளி.2:2 எந்த வகையான அப்போஸ்தலர்களைக் குறித்து பேசுகிறது? ------------- -----------------.

பணியாளர்களும் சபை தொடங்கப்படுவதற்கு அத்தியாவசியமானவைகளாய் இருந்தன. ஆனால் அவர்களுடைய ஸ்தானமும் (நிலை) அவர்களுடைய அற்புதங்களும் இன்றைக்கு அவசியமானதாக இல்லை.

**2. அவர்களுடைய அற்புதம் நடப்பிக்கும் வல்லமை முடிவடைந்திருக்கிறது.**

இன்றைக்கு பூமியில் சபைக்குள்ளே எந்தவொரு அப்போஸ்தலரும் இல்லை என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஏனென்றால் சகல அற்புத வல்லமைகளும் முடிந்துவிட்டன. அற்புதங்களின் நோக்கம் நிறைவடைந்த பொழுது, அவைகள் முடிவடைய வேண்டும் என்பது தேவனுடைய திட்டமாக இருந்தது. தீர்க்கதரிசனங்கள் அந்நியபாஷை பேசுதல், அற்புதமான அறிவு ஆகிய இவைகள் முடிவடைய வேண்டியதாயிருந்தது (1கொரி.13:8-10). இவை அனைத்தும் தேவதிட்டம் நிறைவேற அல்லது முடிவுக்கு வரவேண்டியதாயிருந்தது. தேவனுடைய நிறைவான வெளிப்படுத்துதல் ஆகிய வேதாகமம் வந்தபின்பு, விசுவாசம் ஒரு அளவாக நிறைவடையும் வரை மாத்திரமே தேவன் இந்த ஆவிக்குரிய வரங்களை அளித்தார் (எபே.4:8, 11-13). இப்பொழுது வேதாகமம் நிறைவானதாயிருக்கிறது, நாமும் தேவனுடைய குமாரனை குறித்த பூரணமான அறிவுள்ளவர்களாயிருக்கிறோம். விசுவாசமானது பரிசுத்தவான்களுக்காக ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்டது (யூதா 3). இயேசுவானவர் தேவனுடைய குமாரனாயிருக்கிறார் என்ற அற்புதங்களினாலே என்றென்றைக்குமாக நிரூபிக்கப்பட்ட உண்மையாயிருக்கிறது (யோவா.29:30,31). ஒரு முறை நிரூபிக்கப்பட வேண்டுமென்பது அவசியமில்லை. தேவனுடைய வார்த்தையாகிய சத்தியமானது என்றென்றுமாய் உறுதிப்படுத்தப்பட்ட ஒன்றாயிருக்கிறது. ஒரு முறை உறுதிப்படுத்தப்பட்ட ஒரு சத்தியமானது என்றென்றைக்கும் உறுதிப்படுத்தப்பட்டதாய் இருக்கிறது. இன்றைக்கு வேதவாக்கியங்கள் நம்மை சகல நற்கிரியைகளுக்கும் நேராய் வழிநடத்துகின்றன (2தீமோ.3:16,17). அற்புதங்களை நடப்பிக்கும் அப்போஸ்தலர்களின் வல்லமை முடிவடைந்து விட்டன. ஏன் என்றால் அதன் நோக்கம் நிறைவேறிவிட்டது. அப்போஸ்தலர்களின் வல்லமையானது முடிவடைந்ததாய் இருக்கிறபடியால் இன்றைக்கு பூமியிலே எந்த அப்போஸ்தலரும் இல்லை.

**3.அவர்கள் நிரந்தரமான அலுவலராக அல்ல, தற்காலிக அலுவலர்களாக இருந்தார்கள்.**

சபையின் அற்புதமான ஆரம்பத்திற்காக அற்புத வரங்கள் அளிக்கப்பட்டிருந்தன. இந்த வரங்கள் அப்போஸ்தலர்களாகவும், தீர்க்கதரிசிகளாகவும் இருக்கும்படி மனுஷருக்கு வல்லமையை அளித்தன. ஆனால் இந்த அற்புத வரங்கள் முடிந்து விட்டன, தீர்க்கதரிசன உரைத்தலும் முடிவடைந்து விட்டது. ஆகையால் இன்றைக்கான வல்லமையில்லை, நவீன அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளுக்கான தேவையும் இல்லை. இந்த அலுவல்கள் எப்பொழுதுமே நிரந்தரமானவைகளாக இருக்கும் என்று குறிப்பிடப்படவில்லை. தேவன் எப்பொழுதும் அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் வாரிசுகளை உடையவர்களாயிருக்க வேண்டும் என்று கருதவில்லை. சபை ஸ்தாபிக்கப்படுவதற்காக மாத்திரமே அவர்களுடைய நிலை அத்தியாவசியமானதாக



இப்போது இதுவே கேள்வி: நீங்கள் வேதாகமத்தினுடைய ஒரே ஞானஸ்நானத்தை ஏற்றுக் கொண்டுள்ளீர்களா? அப்படியில்லையென்றால் அதை ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். நீங்கள் புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர் நடபடிகள் முழுவதும் வாசிப்பீர்களென்றால் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்த அனைவரும் சுவிசேஷத்தை அல்லது கிறிஸ்துவின் நற்செய்தியைக் கேள்விப்பட்டு தேவனிடத்திலும், கிறிஸ்துவினிடத்திலும் விசுவாசம் கொண்டு தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி கிறிஸ்துவே தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படும் பொருட்டு ஞானஸ்நானம் பெற்றார்கள் அல்லது தண்ணீரில் மூழ்கினார்கள் என நீங்கள் கண்டுகொள்ளலாம். அதன்பின் கர்த்தர் அவர்களை இரட்சித்து தம்முடைய சபையில் அவர்களை சேர்த்துக்கொண்டார் (அப். 2:38, 41, 47). அவர்கள் செய்தபடி நீங்கள் செய்வீர்களென்றால் கர்த்தர் உங்களையும் இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்வார்.

நீங்கள் ஞானஸ்நானம் பெற்றிருப்பீர்களானால் அல்லது நீங்கள் பெற்றிருப்பதாக நினைப்பீர்களானால் அது தெளிப்பாக அல்லது ஊற்றுதலாக அல்லது அது சரியான நோக்கத்திற்காக இல்லாமலிருக்குமானால் நீங்கள் ஆவிக்குரிய பிரகாரமாக ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவில்லை, நீங்கள் ஏற்கனவே விளக்கமளிக்கப்பட்டுள்ளபடி ஞானஸ்நானம் பெற வேண்டும். ஒரே ஒரு ஞானஸ்நானம் மட்டுமே உள்ளது, மேலும் நீங்கள் கர்த்தருடைய உபதேசத்தின்படி இல்லாவிட்டால் நீங்கள் ஒருபோதும் ஞானஸ்நானம் பெற்றவர்களாயிருக்க மாட்டீர்கள். வேதவாக்கியங்களின்படி நீங்கள் ஞானஸ்நானம் பெறும்போது மட்டுமே நீங்கள் வேதாகமத்தின் ஒரே ஒரு ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்கிறீர்களென உங்களால் கூறமுடியும்.



**சந்தா செலுத்திவிட்டீர்களா?**

The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946

India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001

## தெரிந்து கொள்ளுவோம்

*- K.R.K.Ravi Asir*

- ❒ மனிதன நாக்கில் சுமார் 3000 சுவை அரும்புகள் உள்ளன.
- ❒ மட்ஸ்கிப்பர் என்ற மீன் சில நேரங்களில் நீரிலிருந்து வெளியே வந்து மரங்களில் ஏறி பொழுதைப் போக்குமாம்.
- ❒ ஆண் கொசு 7 நாட்களும், பெண் கொசு ஒரு மாதமும் உயிர் வாழும்.
- ❒ தண்ணீரை அருந்தாத உயிரினம் கங்காரு, எலி.
- ❒ விரல்கள் இல்லாத போதும் நகங்கள் பெற்றுள்ள விலங்கு யானை.
- ❒ ஒரே இடத்தில் நின்று பறக்கக் கூடிய பூச்சியினம் தட்டாம் பூச்சி.
- ❒ மகாத்மா காந்தியின் உருவம் பதித்த அஞ்சல் அட்டையை முதன் முதலில் வெளியிட்ட நாடு போலந்து.

**வேதகம கேள்விகள்**

வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்

ஆம் எனில் ☑ குறியிடவும்



**தற்சோதனை பகுதி - 27**

**27. இன்றைக்கு சபைகளில் தீர்க்கதரிசிகள் இருக்கிறார்களா?**

1. நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசிகள் யாவரும் யோவான்வரைக்கும் தீர்க்கதரிசனம் உரைத்ததுண்டு ☐ வசன ஆதாரம் ------------------
2. யோவான் ஒரு தீர்க்கதரிசியல்ல ☐ வசன ஆதாரம் ------------------
3. நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது ☐ வசன ஆதாரம்- ------------------------------------------------------------------
4. இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களோடு எவைகளையும் கூட்டிக்கொள்ளலாம் ☐ வசன ஆதாரம் ---------------------------
5. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம் ☐ வசன ஆதாரம் - ------------------------------------------------------------------
6. அன்பு ஒழிந்துபோம் ☐ வசன ஆதாரம்----------------------------
7. தேவனானவர் சபையிலே முதலாவது இவர்களை ஏற்படுத்தினார் ☐ வசன ஆதாரம்--------------------------------------------------
8. நாம் எல்லோரும் தீர்க்கதரிசிகளே ☐ வசன ஆதாரம்----------
9. நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்தாலும் அன்பு இல்லையென்றால் ஒன்றுமில்லை ☐ வசன ஆதாரம் ------------------
10. தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் அவர்களுக்கு அடங்காது ☐ வசன ஆதாரம் ------------------------------------------------------------


**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**




**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW**
*Contact Us: 94435 58041*

'ஒரே வழி' வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**




## வேதவாக்கியங்களின்படி கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு

- Jim Massey

*– மொழியாக்கம் சகோ.ரவிஆசீர்*

**பாடம் - 8**

**அப்போஸ்தர்களாகவும், தீர்க்கதரிசிகளாகவும் இருந்தவர்கள் யார்?**

**வரை குறிப்பு**

**1. சபையின் அஸ்திபாரத்திலே அவர்கள் விசேஷமான அலுவலர்களாயிருந்தார்கள்**

**2. அவர்களுடைய அற்புதம் நடப்பிக்கும் வல்லமை முடிவடைந்திருக்கிறது.**

**3. அவர்கள் நிரந்தரமான அல்லது தற்காலிகமான அலுவலர்களாக இருந்தார்கள்.**

**கலந்துரையாடல்**

**1. சபையின் அஸ்திபாரத்திலே அவர்கள் விசேஷ அலுவலர்களாயிருந்தார்கள்:**

சகல காரியங்களும் பூமியிலே அற்புதங்களோடு தொடங்கின. மனுஷனும், உலகமும் அற்புதங்களோடு தொடங்கப்பட்டன. ஆனால் இன்றைக்கு மனுஷனும், உலகமும் அற்புதங்கள் இன்றி தேவனுடைய இயற்கையான திட்டத்தினால் தொடர்ந்து இயங்குகின்றன. இதே விதமாக சபையானது அற்புதங்களினாலே தொடங்கியது. ஆனால் இன்றைக்கு சபையானது தேவனுடைய திட்டத்தினாலே அற்புதங்கள் இன்றி தொடர்ந்து பரவிக்கொண்டிருக்கிறது. தேவனுடைய வார்த்தை முதலாவது அற்புதங்களினாலே கொண்டு வரப்பட்டது. ஆனால் இப்பொழுது தற்கால அற்புதங்களின் தேவையின்றி நமக்கு இருக்கின்ற வேதாகமம் போதிக்கப்படமுடியும்.

சபையின் ஆரம்ப காலத்தில் அப்போஸ்தலர்கள் விசேஷமான அற்புதங்களை நடப்பிக்கும் அலுவலர்களாக இருந்தார்கள். தேவன் தம்முடைய வார்த்தையை வெளிப்படுத்தவும் சபையின் ஆரம்ப காலத்திலே ஊழியஞ்செய்யவும் அவர்களுக்கு விசேஷ வல்லமைகளை அளித்தார். அப்போஸ்தலர்கள் பரிசுத்தாவியானவராலே "சகல சத்தியத்திற்குள்ளும்" வழிநடத்தப்படுவார்கள் என்று இயேசு வாக்குத்தத்தம் பண்ணினார் (யோவா.16:13). அப்போஸ்தலரும், தீர்க்கதரிசிகளும் சபையின் அஸ்திபாரம் அல்லது தொடக்கத்திலே அத்தியாவசியமான பங்குவகிக்கிறவர்களாயிருந்தார்கள் (எபே.2:20). அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் போன்ற மனுஷர் சபையிலே முதலாவதாக தேவனால் ஏற்படுத்தப்பட்டார்கள் என்று வேதாகமம் சொல்லுகிறது (1கொரி.12:28). அவர்கள் அப்போஸ்தலர்களாய் இருந்தார்கள் என்பதற்கு அவர்களுடைய அற்புதங்கள் அடையாளங்களாக இருந்தன (2கொரி.12:12) அவர்களுடைய அற்புதங்கள் அவர்களுடைய பிரசங்கம் தேவனிடத்தில் இருந்து வந்தது என்பதை உறுதிப்படுத்தின (எபி.2:3,4). இந்த பணிகளும்,